ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

रक्ष्योऽहं भवता महेश सकलं त्यक्त्वा विचारं द्रुतं
पुण्यं नातनुते भवानिति वृधा नोयुक्तमेतद्वचः ।
वेदास्त्वत्प्रभवावदन्ति विशदं सत्योक्तयस्त्वां विना
नोशक्तिश्चलितुं हि कस्यचिदपीत्यस्यार्थमालोचय ॥

ரக்ஷ்யோऽஹம் பவதா மஹேஶ ஸகலம் த்யக்த்வா விசாரம் த்ருதம்
புண்யம் நாதநுதே பவாநிதி வ்ருதா நோயுக்தமேதத்வச: ।
வேதாஸ்த்வத்ப்ரபவாவதந்தி விஶதம் ஸத்யோக்தயஸ்த்வாம் விநா
நோஶக்திஶ்சலிதும் ஹி கஸ்யசிதபீத்யஸ்யார்த்தமாலோசய ॥

ஹேமஹேச! ஸகல ஜகத்திற்கும் ஈசனாய் விளங்கும் ஹே சம்போ! இவன் பாபம் செய்திருக்கிறனா அல்லது புண்ய கர்மாவைச் செய்திருக்கிறனா அக்கர்மாக்களும் எவ்விதம் எந்த ஸமயம் செய்திருக்கிறன் என்கிற இவை முதலான விசாரங்களை ஒன்றையும் செய்யாமல் உம்மால் நான் சீக்கிரமாக ரக்ஷிக்கத்தகுந்தவன் நீ புண்யகர்மாவை அனுஷ்டிக்கவில்லை ஆகையால் நான் உன்னைப் பாதுகாக்கமாட்டேன் என்று பயனில்லாத இவ்வார்த்தையைக்கூறுவதில் உபயோகமில்லை. ஏனென்றால் உம்மால் வெளியிடப்பட்டதாயும் உண்மையான வசனங்களையுடைய வேதங்கள் உம்மையன்றியில் அற்பம் சலிப்பதற்குக் கூட ஒரு வஸ்துவிற்கும் ஸ்வயமாக சக்தியில்லை என்று ஸ்பஷ்டமாக முறையிடுகின்றன. இதின் கருத்தைத் தாங்களே ஆலோசித்துப்பாருங்கள்.

ஹே ஈச! உலகிலுள்ள எந்தப்பிராணியும் உம்முடைய ஏவுதலன்றித் தானாக் நல்ல காரியத்தையோ கெட்டகாரியத்தையோ செய்யக்கூடிய சக்தி பொருந்தியதல்ல. எதைச்செய்தாலும் உம்முடைய ஏவுதலால்தான் செய்யவேண்டுமென்று சுருதி வசனங்கள் ஸ்பஷ்டமாய் அறிவிக்கின்றன. ஆகையால் பாபியென்றும் புண்ணியசாலியென்றும் பிரித்துச் சிலரை விலக்கி சிலரைச்சேர்க்காமல் ஸகல ஜனங்களையும் பக்ஷபாதமில்லாமல் பாதுகார்க்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். சுபம்!

உபபத்திராதிபர்.

ஆர்யதர்மம்.

பிரபவ-ஞு மாசி-மீ ௧௧௨

ஸம்ஸ்காரம்.

6-வது அன்னப்பிராசனம்.

(51-வது பக்கத்தொடர்ச்சி)

இதை ஆறுவது மாதத்திலாவது, எட்டாவது மாதத்திலாவது பற்கள் முளைத்தபிறகாவது அவரவர்கள் குலத்தில் வழக்கமாய் அனுஷ்டித்துவந்த மங்களகரமான காலத்திலாவது செய்யவேண்டியது. பிறந்து 150-நாள்களுக்கு மேற்பட்டு 180-நாளுக்குள்பட்டு செய்வது மிகவும் உத்தமம். அவரவர்களது கிருஹ்யசூத்திரத்தில் கூறியவாறு சுபதினத்தில் நாந்தீ சிராத்தம் செய்து பிதிருக்களைத் திருப்திசெய்துவைத்து, பிராமணர்களைக்கொண்டு ஆசீர்வாதம் செய்வித்து, தயிர் தேன் நெய் அன்னம் இவைகளைத் தங்கப் பாத்திரத்தில் கலந்து வைத்துக்கொண்டு, தேவதைகளின் ஸன்னிதிக்கு முன்பாக அன்னையின் மடியில் குழந்தையை, மங்களஸ்நானம்செய்வித்து அலங்கரித்துக் கிழக்குமுகமாக உட்காரவைத்து தேன், நெய், ஸுவர்ணம் இவைகளோடு கலந்து அன்னத்தைக் குழந்தைக்கு மந்திரபூர்வகமாகக் கொடுக்கவேண்டும். இவ்விதமாக அன்னப்ராசானம் செய்வித்தபிறகு தாயாரின் மடியிலிருந்து குழந்தையைஇறக்கிவிடவேண்டும். புருஷக்குழந்தைகளுக்கு இரட்டைப்பட்ட மாதங்களும், ஸ்திரீ குழந்தைகளுக்கு ஒத்தைப்பட்ட மாதங்களும் சுபங்களாம். இதற்குறித்தான திதி வார நக்ஷத்ராதிகளும் லக்கினாதிகளும் நவக்கிரஹங்களின் ஸ்தான விசேஷங்களும்முகூர்த்தக்கிரந்தங்களில்கூறப்படுகிறபடிபார்த்துச் செய்யவேண்டியது. அன்னப்ராசனமான பிறகும் ஒவ்வொரு பதார்த்தங்களாகப் புதிதுபுதிதாகக் கொடுக்கும்பொழுது நாள் பார்த்துக்கொடுக்கவேண்டியது. புதிதாக விளைந்து வந்ததைச் சாப்பிடும்பொழுதும் நாள் பார்த்து தேவதைபிதுருக்கள் முதலியவர்களுக்குத் திருப்திசெய்துவைத்துவிட்டுப் புசிக்கவேண்டுமாம். குழந்தைகளுக்கு ஸ்தன்யபானத்தோடு (முலைப்பால் குடிப்பதோடு)

மாத்திரமிருக்கும் ஸமயமும் ஸ்தன்யம் அன்னம் இவைகளிரண்டையும் சேர்த்து உபயோகப்படுத்தும் ஸமயமும் அன்னத்தை மாத்திரம் புசிக்கும் ஸமயமுமாக மூன்று ஸமயபேதங்களுண்டு. அன்னப்பிராசனத்திற்கு முந்திய தருணம் முதலாவது ஸமயமாகும். அதற்குப்பிறகு பற்கள் முளைக்குந்தருணம் வரை 2-வது ஸமயம். பற்கள் முளைத்துவிட்டால் பிறகு ஸ்தன்யங் கொடுக்கக்கூடாது. கிரமமாக அதை விலக்கிவிட வேண்டியது.

"अथैनं जातदशनं क्रमादपनयेत्स्तनात्"

அதைநம் ஜாததஶநம் க்ரமாதபநயேத்ஸ்தநாத் ।

என்று வைத்திய சாஸ்திரங்களில் இந்த விஷயம் விரிவாகச் சொல்லப்படுகின்றது. எப்பொழுதும் ஸாத்விக ஆஹாரங்களையே உபயோகப்படுத்தும் வழக்கத்தை விருத்தி செய்யவேண்டியது. கெட்ட ஆஹாரத்தை ஒரு பொழுதும் உபயோகிக்கக்கூடாது. புசிக்கப்படும் வஸ்துக்கள் ஸ்வபாவத்தாலும் வேறு வஸ்துக்களோடு சேறுவதாலும் அந்த வஸ்துக்களின் சொந்தக்காரனது தோஷத்தாலும் கெட்டுப்போகின்றனவாம். ஆகவே இயற்கையாகவே கெட்டதாயிருக்கும் பதார்த்தங்களையும் கலப்பினுல் கெடுதலையடையும் பதார்த்தங்களையும், சொந்தக்காரன் தோஷத்தால் கெடுவதையும் நன்ருய் கவனிக்கவேண்டும். அந்தக் கெடுதல் எம்மாதிரியுள்ளது என்பதையுமுணரவேண்டும். இவைகளைப்பற்றி நமது ஸ்மிருதிகள் புராணங்கள் கூறியிருப்பதை வைத்தியசாஸ்திர நூல்களும் சோதிடசாஸ்திரத்தின் ஸம்ஹிதை நூல்களும் சரியான காரணங்களுடன் விரிவாய்க் கூறுகின்றன. அன்னப் பிராசனப் பிரஸங்கத்தால் அவைகளையும்பற்றி சிறிது கூறுவாம். சுபம்!

பத்திராதிபர்.

வர்ணாச்ரமதர்ம மஹாநாடு

தீர்மானங்களின் விபரம்.

சென்னை ஹிந்து ஹைஸ்கூல் மண்டபத்தில் சென்றமாதம் 29, 30, 31-ந் தேதிகளில் நடைபெற்ற அகில இந்திய வர்ணாச்ரம தர்ம மஹாநாட்டில் கீழ்கண்ட தீர்மானங்கள் விவாதத்திற்குப் பின் அங்கீகரிக்கப்பட்டன.

வர்ணாச்ரம தர்மாநுஷ்டானத்தை சம்ரக்ஷிப்பதும் அதற்கு ஆதாரமான பரம்பரையான ஜாதி தர்மங்களையும், குலதர்மங்களையும் விடாமல் அநுசரிப்பதும் இந்தியர்களுடையவும் மற்ற லோக ஜனங்களுடையவும், ஒற்றுமைக்கும், க்ஷேமலாபங்களுக்கும், மிக அவச்யமென இம்மஹாநாடு அபிப்பிராயப்படுகிறது. வர்ணாச்ரம தர்ம விதிகளில் இஷ்டப்படி தலையிடுவதும் அதன் அனுஷ்டானத்தில் இடையூறுண்டுபண்ணுவதும் இந்தியர் ஒற்றுமையும் முன்னேற்றமும் அடைவதற்குப் பெறிய தடையாகுமென்றும் இம் மஹாநாடு தீர்மானிக்கின்றது.

2. கர்மானுஸாரியாகப்பிறப்புண்டாகிறதென்கிற சாஸ்திரத்தை அனுஸரித்து ஒவ்வொரு ஜீவனும் தன் ஸம்ஸ்காரத்திற்கேற்ற வகுப்பில் பிறக்கின்றானென்றும் அந்தப் பிறப்புமூலமே அந்த ஜீவன் அநுஷ்டிக்கவேண்டிய முறையை நிர்ணயித்து அந்த ஜீவனின் உஜ்ஜீவனத்திற்குக் காரணமாகிறதென்றும் ஆகையால் ஒவ்வொரு ஜீவனும் தம்தம் பிறப்பிற்குரிய கடமைகளைச் சரிவா செய்வதே ஆத்மசிரயேஸ்ஸையும் ஸமூகஅபிவிருத்தியையும்உண்டு பண்ணக்கூடுமென்றும் இச்சபையினர் தீர்மானிக்கின்றனர். வர்ணாச்ரமிகளான ஹிந்துக்கள் ஸம்ஸ்கிருதபாஷையைக் கற்கவேண்டியது மிகவும் அவச்யமாகையால் ஹிந்து வகுப்பு வாலிபர்களுக்கு ஸம்ஸ்கிருதக் கல்வியைபோதிக்க வர்ணாச்ரமிகள் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த சபை கேட்டுக்கொள்ளுகிறது.

3. வர்ணாச்ரம தர்மானுஷ்டானத்திற்கு அதைப்பற்றிய கல்வியும் அறிவும் ஏற்படவேண்டியது அவச்யமாகையால் அக்கல்வியை கலாசாலைகளிலும் பள்ளிக் கூடங்களிலும் போதிக்க வேண்டும். வேதசாஸ்திரம் ஆகமம் முதலியவற்றில் உபதேசிக்கப்பட்டிருப்பவைகளை சிருவர்களுக்குப் போதிக்கவும், வர்ணாச்ரம தர்மப்பிரசாரம்செய்யவும் ஒவ்வொரு நகரங்களிலும் தகுந்த ஸ்தாபனங்களை ஏற்படுத்தவேண்டுமென்றும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

4. சாஸ்திர ஸம்மதமான தீண்டாமை விதிகள் ஸமூகக்ஷேமத்தை உத்தேசித்து உண்டானவை என்றும் அவ்விதிகளால் தேச ஐக்கியத்திற்கும் முன்னேற்றத்திற்கும் யாதொரு தடையுமில்லை என்றும் இந்த சபை தீர்மானிக்கிறது.

5. விஜாதியர்களுடைய ஸமபங்திபோஜனம் கலப்பு விவாஹம் முதலியன சாஸ்திரங்களில் ஆக்ஷேபிக்கப்பட்டிருப்பது தற்காலம் சமூக ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும் தடையாகாதென்றும் ஹிந்துமத ஸம்ரக்ஷணத்திற்கு இந்த சாஸ்திரவிதிகள் அவச்யமென்றும் இச்சபை தீர்மானிக்கிறது.

6. வர்ணாச்ரம தர்மிகளுள் விவாஹங்களில் வரசுல்கம் கன்யாசுல்கம் முதலியவை நிர்பந்தித்து வாங்கப்படும் வழக்கத்தை இக்கூட்டம் பலமாகக் கண்டிக்கிறது. இவ்வழக்கம் சாஸ்திரவிரோதமாக இருப்பதுடன் கன்னிகைகள்ருதுமதியாவதற்குமுன் உசித காலத்தில் தகுந்தபடி கன்னிகாதானம் செய்து கொடுக்கப்படுவதற்கு இது ஒரு தடையாகவிருப்பதாலும் இந்த வழக்கத்தை ஒழிக்கவேண்டிய முறைகளை வர்ணாச்ரமிகள் உடனே அனுஷ்டிக்கவேண்டுமென்று இக்கூட்டம் வற்புறுத்துகின்றது.

7 ஸநாதன தர்மத்தை அனுசரிக்கும் ஹிந்துக்களின் மதாசாரங்களில் அரசாங்கத்தார் சட்டங்கள் மூலம் தலையிடுவதை இக்கூட்டம் பலமாகக் கண்டிக்கிறது. ஹிந்து ஸ்திரீ புருஷர்களுடைய விவாஹவயதை நிர்ணயிக்க இந்தியா சட்டசபையிலும் சென்னை சட்டசபையிலும் கொண்டுவரப்பட்டிருக்கும்மசோதாக்களையும் பலமாக எதிர்க்கின்றது.

8. தேவஸ்தான ஸொத்துக்கள் சாஸ்திரமுறைப்படி தேவஸ்தான வைதிககர்மாக்களையும் நிர்வாகத்தையும் நடத்தவுமே உபயோகிக்கப்படவேண்டும் இவை தவிர வேறு வழிகளில் விநியோகிக்கக் கூடாது. அவ்விதம் விநியோகிக்கச் செய்யப்படும் முயற்சியை இக்கூட்டம் கண்டிக்கிறது.

9. ஹிந்துமதஸ்தாபன சட்டத்தின்கீழ்அமைக்கப்பட்டுள்ள தேவஸ்தான நிர்வாகபோர்டார் முதல் ஸகல அதிகாரிகளும் தேவாலயம் ஸம்ப்ரதாயத்திலும் பூஜை முதலிய சாஸ்திரீய கர்மங்களிலும் தங்களுக்கு முழுநம்பிக்கையிருப்பதாக நியமனமாகும் முன்னர் உறுதிமொழி கொடுக்கவேண்டுமென இம்மஹாநாடு தீர்மானிக்கிறது.

10 வர்ணாச்ரம தர்மானுஷ்டானத்திற்குஅவச்யமானபுரோஹிதர்கள் வேதம் கிருஹ்யஸூத்திரம் முதலியவற்றிலும் வைதிக கர்மங்களைச் செய்துவைப்பதிலும் தேர்ச்சிபெற்றவர்களாகஇருக்குமாறு தகுந்த ஸாதனங்களையும் வஸதிகளையும் உண்டுபண்ண வே

ண்டுமென்றும் அவர்களுக்கு வேண்டிய ஆதரவையளிக்க வேண்டு மென்றும் இம்மஹாநாடு முடிவு செய்கிறது.

11. இராஜீய விஷயங்களை முடிவு செய்வதற்காக ஏற்பட்டுள்ள ஸ்தாபனங்களில் வர்ணாச்ரம விஷயங்களைப்பற்றிச் சர்ச்சை செய்து முடிவுசெய்வதை இக்கூட்டம் கண்டிக்கிறது. அவ்விதம் பொதுஸ்தாபனங்களில் விவாதத்திற்குறிய இம்மாதிரி விஷயங்களைச்சர்ச்சை செய்யக்கூடாதென்று அந்த ஸ்தாபனங்களிலுள்ளவர்களை இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

12. விக்டோரியா மஹாராணி மஹாசாஸனத்தில் அளிக்கப்பட்டுள்ள உறுதிமொழிக்கு விரோதமாகக் கவர்ன்மெண்டார் ஹிந்துமதாசாரங்களில் தலையிடக்கூடாதென்றும் மதாசாரத்திற்கு விரோதமானவர்களிடம் ஹிந்துமதாசார ஸம்ரக்ஷணத்தை ஒப்படைக்கக் கூடாதென்றும் இககூட்டம் தீர்மானிக்கிறது.

13. வர்ணாச்ரம தர்மப்ராசாரத்திற்காக ஸம்ஸ்கிருதம் ஆங்கிலம் தேசபாஷை ஆகியவற்றில் பத்திரிகைகளைப் பிரசுரிக்க வேண்டுவது அவச்யமென்றும் ஆசாரியஸ்தானத்தை வகிக்கும் மடாதிபதிகள் ஸநாதனதர்ம ப்ராசாரத்திற்கான பிருவிருத்திகளில் அதிக ஆதாவுகாட்டி வரவேண்டுமென்றும் தீர்மானிக்கிறது.

14, இந்த நாட்டில் துர்நடத்தையைத் தொழிலாகக் கொண்டு ஜீவிக்கும் ஸ்திரீகளை அவ்விதம் செய்வதினின்றும் தடுப்பதற்ாகச் சட்டமூலமாக நடவடிக்கை எடுத்துக்கொள்வதில் இச்சபையாருக்கு ஆக்ஷேபமில்லை ஆனால் தேவாலயங்களில் தேவதாஸிகளாக தேவகைங்கர்யங்களைச் செய்துகொண்டிருப்பவர்கள் அந்தக் கைங்கர்யத்தை இனியும் செய்துவரவேண்டும் என்றும் தேவதாஸிகளாகவிருக்கும் ஒரு காரணத்தை முன்னிட்டு மட்டும் அவர்கள் சம்பந்தமாகக் கொண்டுவரப்பட்டிருக்கும் சட்டத்தை இக்கூட்டம் எதிர்க்கிறது.

முடிவில் இம்மஹாநாட்டின் நோக்கங்களை இடைவிடாமல் நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை அவ்வப்பொழுது எடுத்துக்கொள்ளவேண்டியதற்காக ஒரு நிரந்தாக் கமிட்டியும் இக்கூட்டத்தில் நியமிக்கப்பட்டிருக்கிறது. சுபம்!

வெ. ஸோமதேவசர்மா.

பாரிதோஷிக ஸபை.

சிதம்பரம் ரா. ம. சு. வேதசாஸ்திர வித்தியாசாலையில் பிரபவ வருஷம் மார்கழி-மீ 23உ [7-1-1928] பிற்பகல் 4-மணிக்கு சென்ற வருடத்திய வார்ஷிக பரீக்ஷையில் தேறின மாணவர்களுக்கு பிரைஸ் அளிக்க பாரிதோஷிக ஸபை நடந்தேறியது.

மேற்படி ஸபையில் மைலாப்பூர் ஸம்ஸ்கிருதகாலேஜ் பிரின்ஸிபல் மஹாமஹோபாத்தியாய வெங்குடுசுப்பாசாஸ்திரிகள் அவர்கள் அக்கிராஸனம்வஹித்தார்கள். மஹாமஹோபாத்தியாய தண்டபாணி ஸ்வாமிதீக்ஷிதர் அவர்கள் முதலான அனேக வித்வான்களும் மற்றுமுள்ள கனதனவான்களும் நகரத்தார்கள் அனேகரும் விஜயம் செய்திருந்தார்கள்.

ஸபையில் முதலில் யஜுர்வேத ஸாமவேதகோஷங்களுடன் மங்களாசரணம் நடந்தபின் சாஸ்திரமாணவன் ஒருவனுல் வியாகரணம் என்ற விஷயத்தைப் பற்றி ஒரு வியாஸம் படிப்பிக்கப்பட்டது. பிறகு அக்கிராஸனரின் முகவுரை நடந்தபின் ஷை பாடசாலைத் தலைமை உபாத்தியாயர் M. N. இராகவசாஸ்திரிகளவர்களால் சென்ற வருடத்திய ரிபோர்ட்டு படிக்கப்பட்டது. (இத்துடன்ரிபோர்டும்அனுப்பப்பட்டிருக்கிறது.அதையும்தயவுசெய்து இவ்விடத்தில் அச்சிடக்கேட்டுக்கொள்ளுகிறேம.)மஹாமஹோபாத்தியாய தண்டபாணிஸ்வாமி தீக்ஷிதரவர்கள், மதுரை ஸம்ஸ்கிருத காலேஜ் வ்யாகரண ப்ரொபஸர் ராமசுப்பாசாஸ்திரிகள், சிதம்பரம் ஸம்ஸகிருதகாலேஜ் ப்ரொபஸர் பரமேச்வரசாஸ்திரிகள் சிவராம கிருஷ்ணசாஸ்திரிகள் முதலானேர்கள் ஷை பாடசாலையைப்பற்றி மிகவும் புகழ்ந்துபேசினுர்கள். பிறகு அக்கிராஸனரின் உபன்யாஸம் நடந்தது. அதில் மேற்படி பாடசாலையில் மீமாம்ஸா முதலான வகுப்புகளில் சிரோமணி கிளாஸ் வைப்பது முதலான பாடசாலையின் முன்னேற்றத்தைப் பற்றியும் சாஸ்திரப்பிள்ளைகளுக்கு அத்தியயன ஸம்பந்தமும். அத்யயனம் செய்கிற பிள்ளைகளுக்கு சாஸ்திரபாடத்தில் பிரவேசமும் உண்டுபண்ணுவதைப்பற்றியும் மிகவும் விஸ்தாரமாய் எடுத்துரைத்தார்கள்.

முடிவில் தாம்பூலம் வழங்கப்பட்டு ஸபை கலைந்தது.

S. கிருஷ்ணமூர்த்தி, வியாகரணவித்யார்த்தி,

விவாஹவயது மசோதாக் கண்டனக் கூட்டங்கள்.

திருவிடைமருதூர்.

இவ்வூரில் 15-2-28 காலை 9-மணிக்கு ரிடைர்ட் பிர்ம்மஸ்ரீ டிஸ்டிரிக்ட் ஸப்ரிஜிஸதார் கிருஷ்ணஸாமி அய்யர் அவர்கள் பங்களாவில் ஒரு பொதுக்கூட்டம் கூடியது. ரிடைர்ட் தாசில்தார் பிரம்மஸ்ரீ ராமச்சந்திரய்யர், வக்கீல் ஸ்ரீபாலசுப்பிரமணியய்யர், ஸ்ரீகல்யாணபுரம் வேப்பத்தூர் நரஸிம்மய்யர், ஸ்ரீ ரிடைர்ட் இஞ்சினீர்கள் முதலான பல கனவான்களும், ஸ்ரீமடம் ஆஸ்தான வித்வான் மஹோபதேசக ப. பஞ்சாபகேசசாஸ்திரிகள் ஸ்ரீவத்ஸ வெ. ஸோமதேவ சர்மா கிருஹ்யக்ஞ ஸ்ரீஉமாமகேஸ்வரசாஸ்திரியள் அர்ஜுனகவி முதலான பண்டிதர்களும் மற்றும் பல ஜனங்களும் வந்திருந்தார்கள். ஸ்ரீராமச்சந்திரய்யர்அவர்கள் தலைமையின்கீழ் ஸ்ரீ கவிரத்னம் ஆர்யதர்மம் பத்திராதிபர் ப. பஞ்சாபகேச சாஸ்திரியள் ஷை மசோதாவைக் கண்டித்துத் தீர்மானத்தைப் பிரேரேபித்தார். ஸ்ரீ வெ. ஸோமதேவசர்மா 1-மணிநேரம் அதை ஆமோதித்து வெகுஅழகாய் உபன்யஸித்தார்கள். உடனே ஏகமனதாய் ஷை தீர்மானம் எல்லோராலும் ஆமோதிக்கப்பட்டு கவர்னருக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது.

சீர்காழி.

இந்தஊரில் 15-2-28மாலையில் பிர்ம்மஸ்ரீ குன்னம் சுப்பிரமணிய அய்யரவர்கள் ஸ்கூல் ஹெட்மாஸ்டர் முத்துஸாமிஅய்யர், வக்கீல் சுந்தரமய்யங்கார் முதலானபல பிரமுகர்களும், ஸ்ரீமடம் ஆஸ்தான வித்வான் கவிரத்னம் ப. பஞ்சாபகேசசாஸ்திரியள், ஸ்ரீவத்ஸ வெ. ஸோமதேவசர்மா, கிருக்யக்ஞ ஸ்ரீ உமமஹேச்வர சாஸ்திரியள், முதலானபண்டிதர்களும் பின்னும் அநேகஜனங்களும் கூடியிருந்தார்கள். வக்கீல் மகா-ா-ஸ்ரீ சுப்பிரமணியய்யரவர்கள் அக்ராசனத்தின் கீழ் கிருஹ்யக்ஞ உமாமகேச்வர சாஸ்திரியள் சாஸ்திரீயமாய் இம்மசோதா சரியல்லவென்று கண்டித்து அரைமணி நேரம் உபன்யஸித்தார். பிறகு ஸ்ரீமடம் வித்வான் ப. பஞ்சாபகேச சாஸ்திரியள் ஷை மசோதாவை சாஸ்திரங்களாலும், யுக்திகளாலும், ஆசாரங்களாலும் நன்கு கண்டித்து எவ்விதத்திலும் இந்த மசோதா இந்துக்களுக்குப் பெரும் கஷ்டத்தைக் கொடுக்கக் கூடியதாகையால் இதைஅடியோடு விலக்கவேண்டுமென்று 1மணி

நேரம் உபன்யஸித்துக் கொண்டுவந்த தீர்மானத்தை ஸ்ரீ வெ. ஸோமதேவசர்மா அவர்கள் இதற்கு ஸாதகமாக மேனாட்டார்களுடைய சிலகொள்கைகளையும் நம்சாஸ்திரங்களையும் மேற்கோளாகக் காட்டி இதைஆமோதித்தார்கள். ஸபையிலுள்ளவர்களால் ஏகமனதாய் அங்கீகரிக்கப்பட்டு இத்தீர்மானம் கனம் கவர்னர் அவர்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது.

ஒ. சிறுவயல்.

(1) இந்த ஊரில் 11—2—28-ல் ஸ்ரீராமகதாமிருதவர்ஷண ஸபையில் ஸிகிர்டேரியின் வரவேற்புக்குட்பட்டு, ஸநாதநதர்மப் பற்றுள்ள ஆஸ்திகஜனங்கள் யாவரும் இரவு 7-மணிககுக் குழுமினர்.

(2) பிர்மஸ்ரீ கோபாலகிருஷ்ணய்யர், பிர்மஸ்ரீ சிவராமய்யர் முதலானவர்களின்பிரேரேபணத்திற்கிணங்கி பிர்மஸ்ரீ K.R, விசுவநாதசாஸ்திரிகள் தலைமை வகித்தனர்.

(3) ஸபையோர்களின் கரகோஷத்திற்கிடையில் தலைவர் அவர்கள் பிரகிருதம் டில்லி சட்டஸபையிலும் சென்னை சட்டஸபையிலும் ஸ்ரீ ஹரிவிலாஸ் சாரதா, டாக்டர் ஸ்ரீமதிமுத்துலக்ஷ்மி ரெட்டியார் இவர்கள் கொண்டுவந்திருக்கும் 2 விவாஹஸம்மந்தமான பில்களும் எல்லா அம்சத்திலும் நம்மை பாதிக்கக்கூடியவைகளேயன்றி நன்மைபயக்கப்பிறந்தவையல்லவென்று தொடங்கி அதன் ஸ்வரூபத்தையுமெடுத்துக்காட்டி மநு முதலிய நம் அவதார புருஷர்களின் மகிமையைக்காட்டும் விவாஹஸம்பந்தமான தர்மசாஸ்திரங்களின் ஸித்தாந்தத்தையும் மஹாமஹோபாத்யாய பிர்மஸ்ரீ யசச்சரீரர்களான கணபதிசாஸ்திரிகள் அவர்களால் இயற்றப்பட்ட வயோநிர்ணயம் என்ற கிரந்தத்தின் அருமை பெருமையையும் அதனிலுள்ள ஸித்தாந்தவிஷயங்களையும் நம் சாஸ்திரரீதியாய் அனுஷ்டிப்பதால் உண்டாகும் பயன்களையும்அவ்விதமில்லாவிடில் இகபர ஸுகமின்மையும் பாமரர் மனதிலும் பதியும்படி நன்குவிளக்கிக்காட்டி நம்பழக்கங்களுக்கும் முன்னோர்களின் அபிப்பிராயத்திற்கும் நன்மைக்குக்காரணமானவைகளையே தீமைக்குக் காரணமாகக் காட்டி முரண்பாடக ஏற்பட்டிருக்கிற ஷை மசோதாக்களைக்கண்டித்து விக்டோரியா மஹாராணியாரின் திருவாக்கையும் காண்பித்து இந்த பில்களை சட்டமாக்கக் கூடாதென்று சென்னை கவர்னர் ராஜப்ரதிநிதி அவர்களுக்கு மனு

மூலமாய்த் தெரிவித்துக்கொள்ளவேணுமென்றும் இன்னும் பல விஷயங்களையும் விரித்துக் கூறி ஷை ஸபையில் வைக்கப்பட்டிருந்த ஸ்ரீகாஞ்சீ காமகோடிபீடாதிபதிஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளின் திருவுருவப்படத்தை தியாநித்து தரிசித்து இந்த ஆசாரியாள் செய்யும் ஸனாதன தர்ம ஸ்தாபன முயற்சியையும் சிஷ்யஜனங்களிடத்திலுள்ள அவ்யாஜ கருணையையும் எடுத்துரைத்து அவர்களின் பூர்ணானுக்கிரகத்தால் ஐயமின்றி நமது காரியம் வெற்றி பெருமென்று உபந்யஸித்து ஸபையிலுள்ளோர் யாவரும் ஷை கண்டனங்களை ஏற்றுக்கொண்டதின் பிறகு கண்டனத்தீர்மானங்களைக்கையெழுத்திட்டு கவர்மெண்டாருக்குத்தபால் மூலம் அனுப்பும்படிக்கு ஸிகிரிடேரி அவர்களைக்கேட்டுக்கொண்டு கரகோஷத்துடன் ஆஸனத்தில் அமர்ந்தார்கள்.

பிறகு T. V. ஸ்வாமிநாதசாஸ்திரிகள் அவர்களும் பல கஷ்டங்களை விளைவிக்கும் இக்கொடுங் கலிகாலத்தில் இவ்விதச்சட்டங்களுமேற்படுமானால் சொல்ல வேண்டியதில்லை. ஆதலால் அக்ராஸனர் இனிய சொற்களால் விளக்கியபடி காருண்ய கவர்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம் என்று பல பிரமாணங்களோடு சபையோர்பிரமிக்க இன்மொழிகளைப்பொழிந்தனர்.

பின்னர் அக்ராஸனர் பின்னுரை கூறியதும் ஆசார்யாள் கவர்மெண்டார் ஸபை ஸனாதனதர்மம் ஸபையோர்கள் யாவருக்கும் வாழ்த்துக்கூறி சந்தன தாம்பூலம் வழங்கி ஆசார்ய உருவத்திற்குக்கற்பூரம் நீராஜனஞ்செய்து பிரார்த்தனை புரஸ்ஸரமாக 11 மணிக்கு இனிது ஸபை நிறைவேற்றப்பட்டது. சுபம்!

டி வி. ஸ்ரீநிவாசய்யர்
ஸிகிர்டேரி.

கண்டரமாணிக்கம்.

இராமநாதபுரம்ஜில்லா கண்டரமாணிக்கத்தில் ஆர்யதர்மஸம்வர்த்தனீஸபையின் ஆதரவில் 6—2—28-ல் கூடிய கூட்டத்தில் ப்ரும்மஸ்ரீ அழ. வெங்கடாசலமய்யங்காரவர்கள் அக்ராஸனத்தின் கீழ் அடியிற்கண்ட தீர்மானம் நிறைவேறியது.

இந்தியா சட்டசபையிலும் சென்னை சட்டசபையிலும் கொண்டுவரப்போகிற விவாஹ வயது நிர்ணய மசோதாவானது இந்துக்களின் சாஸ்திரங்களுக்கும் ஆசாரங்களுக்கும் மதத்திற்கும்

க்ஷேமத்திற்கும் நேர் விரோதமாயிருப்பதால் அதை இந்த ஸபையில் அழுத்தமாய்க் கண்டிக்கப்பட்டு இது சட்டமாகக்கூடாதென்று கனம் டில்லி ராஜப்பிரதிநிதி அவர்களுக்கும் சென்னை கனம் கவர்னர் அவர்களுக்கும் மஹஜர்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

V. விச்வநாதய்யர்.

குன்னியூர.

மன்னார்குடி தாலூகா:— ஷை யூர் வாணீவிலாஸ சங்கத்தின் ஆதரவில் கூடிய இந்தக்கூட்டம் சென்ற 19—2—28-ல் ஷையூர் அக்ரஹாரம் 'ஆனந்தேச்வரஸ்வாமிசந்நிதியில் மாலையில் கூடியது ஸ்ரீ ஸ.சுப்பிரமணியஅய்யர்பிரும்மஸ்ரீ ரா. கிருஷ்ணமூர்த்திசாஸ்திரிகள் அவர்களை ஷை கூட்டத்திற்கு அக்ராஸனராக பிரேரிக்க ஸ்ரீ ஸ்ரீநிவாஸனால் ஆமோதிக்கப்பட்டு ஆஸநமமர்ந்ததும் அக்ராஸனர் அவர்கள் மதத்தின் விவரமும் ஆஸ்திகமதத்தின் மேன்மையும் வர்ணாச்ரமங்களின் பிரிவும் அதில் கிரஹஸ்தாச்ரமத்தின் உயர்வும் அதற்குக்காரணமானவிவாஹவிவரமும் பால்யவிவாஹ நன்மையும் நவீனவயது விவாஹத்தீமையும் தெரிவித்து ஷை மசோதாவைக கண்டித்தார்கள். பிறகு ஷை மசோதாவைக் கண்டித்து எல்லோராலும் ஏகோபித்துத்தீர்மானம் நிறைவேற்றி ஷை தீர்மானங்களை மாகாணாதிபதிக்கும் தேசாதிபதிக்கும் அனுப்பும்படி அக்ராஸனருக்குஅதிகாரம்கொடுத்துப்பிறகுஇப்பெருங்கூட்டம்கலைவுற்றது.

ஸ ஸுப்பிரமணிய அயயர்,
குன்னியூர்.

மாயவரம்.

இவ்வூர் காவேரிஜபமண்டபத்தில் ஒரு மஹாஜன ஸங்கம் கூடியது. அதில் சுமார் 300-பேர்களுக்குமேல் விஜயம் செய்திருந்தார்கள். ஸபையோர்களின் வேண்டுகோளுக்கிணங்கி ஸ்ரீமான் வால்மீகி T. S. நடேசசாஸ்திரியள் அக்கிராஸனம் வகித்தார். துவக்கத்தில் அக்ராசனரால் முகவுரையாகச் சில வார்த்தைகள் இம்மசோதாவைக் கண்டித்து பேசியபிறகு கும்பகோணம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகளின் மடத்துப் பிரசாரகவித்வான் V. ஜகதீசுவரசாஸ்திரியள் இந்த மசோதாவால் ஏற்படும் கஷ்டங்களை சாஸ்திரவாயிலாகவும் யுக்திகளாலும் உபன்யஸித்து எடுத்துக் காட்டினார்கள்.

பிறகு இந்தியா சட்டசபையிலும்சென்னை சட்டசபையிலும் கொண்டுவரப்படும் விவாஹவயது மசோதா ஸம்போகவயது நிர்ணயமசோதா முதலானவைகள் இந்துக்களுடைய வர்ணாச்ரம தர்மாநுஷ்டானங்களுக்கும் சாஸ்திரங்களுக்கும் முற்றிலும் விரோதமாயிருப்பதால் அவைகளை இம்மஹாநாடு அழுத்தமாகக்கண்டிக்கிறதென்று ஸ்ரீமான் கே. எஸ். ஸ்ரீனிவாஸய்யங்காரால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை எல்லாஜனங்களும் ஏகமனதாய் அங்கீகரித்து இதைகவர்ன்மெண்டாருக்கும் பத்திரிகைகளுக்கும் அனுப்பும்படி அக்ராஸனருக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள், பிராமணரல்லாத வர்ணாச்ரம நண்பர்களுக்கும் இம்மசோதா சட்டமானால் பாதகமேற்படுமாகையால் அவர்களும் இதில் ஒத்துழைக்க வேண்டுமென்று இந்த சபை கேட்டுக்கொள்ளுகிறது.

டி. ராகவாசியார், திருவிழுந்தூர்.

குன்னக்குடி.

திருப்பத்தூர் தாலூகா குன்னக்குடி கிராமத்தில் 12-2-28ல் இம்மசோதா சம்பந்தமான ஓர் கண்டன மகாசபை கூடிற்று. அதில் பல கிராமங்களிலிருந்தும் அனேகம் ஜனங்கள் வந்திருந்தார்கள். அச்சமயம் ஷையூர் மகா-ா-ஸ்ரீ டாக்டர் S. ஸ்ரீனிவாஸாசாரியார் அவர்கள் அக்கிராஸனம் வகித்தார்கள். அக்கிராசனாதிபதியவர்களின் பிரேரேபணையின்பேரில் ஷையூர் வித்யாபிவர்த்தனீசபா காரியதர்சியான பிர்மஸ்ரீ நாகஸ்வாமிசாஸ்திரியள் அவர்கள் பல பிரமாணங்களைக்கொண்டு இந்த மசோதாக்கூடாதென்று கண்டித்தபிறகு ஷைநகர் ஷண்முகவித்யாசாலை பண்டிதரான பிர்மஸ்ரீ ராமஸ்வாமிசாஸ்திரியளவர்கள் ஷை நாகஸ்வாமி சாஸ்திரியள் நிரூபணம் செய்த விஷயங்களை ஆமோதித்து இந்த மசோதா சுருதி ஸ்மிருதி சிஷ்டாசாரங்களுக்கு விரோதமென்பதைப் பலமேற்கோளுடன்நன்கு விளக்கிக்காட்டி நன்றாகஉபன்யஸித்தார்கள்.

பிறகு இந்த மசோதா எவ்விதத்தாலும் சட்டசபையில் பிரவேசிக்க அருகமில்லை என்று எல்லோராலும் ஏகமனதாய் தீர்மானிக்கப்பட்டு இத்தீர்மானத்தை நம் காருண்யமுள்ள கவர்ன்மெண்டாருக்கு அனுப்பும்படி அக்ராசனாதிபதியிடமும் கேட்டுக்கொண்டு வந்தனோபசாரத்துடன் சபை முடிவுபெற்றது.

ஆர் எம். பாலசுப்பிரமணிய சர்மா,
ஷண்முகவித்யாசாலை,
குன்னக்குடி.

दशस्थानयोः शून्यद्वयं विलिख्य तदनन्तरमेकसंख्यानिवेशनेन विलेख्या। द्विशतत्रिशताद्या एकोनसहस्रपर्यन्तास्तत्तदन्तर्गताश्च— यथा एकस्थाननिवेश्या एकस्थाने, दशस्थाननिवेश्या दशस्थाने, शतस्थाननिवेश्याश्शतस्थाने निवेशिता भवन्ति— तथा विलेख्याः। एवमेवोत्तरत्राप्यूह्यम्। अत्रेदमवधेयम्— संख्यानामेकादीनि परार्धपर्यन्तानि अष्टादशस्थानानि व्यवहारार्थं पूर्वैः कल्पितानीत्युक्तम्। तत्र— एकस्थानस्य वामभाग एव दशस्थानं निवेश्यम्। तद्वामभाग एव शतस्थानमित्ययमेव स्थाननिवेशनप्रकारोऽनादिपरम्परागतः। नान्यथा। "सप्तपञ्चारुणोदय" इत्यादि वचनात्। अत्र हि सूर्योदयादारभ्य सप्तपञ्चाशन्नाडिका अतीता यदा— तदाऽरुणोदयकाल इति प्रतिपाद्यते। सप्तपञ्चाशदिति नाडीसंख्यावाचकस्सप्त पञ्चेति शब्दस्तदैव तां वदेत्— यदा एकस्थान वामभाग एव दशस्थानं निवेश्यत इति नियमोऽङ्गीक्रियते। तद्यथा— प्रथमनिर्दिष्टत्वात्सप्तसंख्या प्रथमं निवेश्या। अनन्तरं पठिता पञ्चसंख्या तदनन्तरं निवेश्या। यदीयं सप्तसंख्याया वामभागे निवेश्यते, तदैव सप्तपञ्चाशत्संख्यां ब्रूयात्। यदि दक्षिणभागे निवेश्यते— तदा पञ्चसप्ततिं ब्रूयात्। तच्च विरुद्धम्। अत इत्थमेव नियमः। तन्मूलाचेयं "अङ्कानां वामतो गति" रित्यभियुक्तसूक्तिः। तन्मूला च लोके गाणितिकानां गणनारीतिरपि। यदा—अनेकस्थानविशिष्टा अङ्काः स्युः— तदाऽयमङ्क एतावत्स्थानको भवतीति ज्ञानार्थं तेषामेकस्थानमारभ्यैव गणना कार्या। न वैपरीत्येन। कुत इति चेत्—उच्यते—बहुस्थानविशिष्टेऽङ्के सहसा तत्प्रतिपत्त्यभावात्। यदि तु— अन्त्यप्रभृति— एकं, दश, शतमित्यादि गणनायामपि एकस्थाने यत्स्थानं समाप्यते—तदेवान्त्यस्येति तुल्यवित्ति वेद्यतया ज्ञायते— इत्युच्यते, तदा किमनया कुसृष्ट्या। एकस्थानमारभ्यैव सर्वथा गणनीयत्वात्। प्रत्युत—वस्तुतोऽन्यान्यस्थानस्थितानामन्यान्यस्थानस्थताकल्पनेन गणनीयतया यथागणनं स्थानावधारणं न स्यात्। एकस्थानाद्गणनायां तु यद्द्वितीयतया गण्यते—तद्दशस्थानमेव, यत्तृतीयतया गण्यते— तच्छतस्थानमेवेति तत्तत्स्थानावधारणमव्यभिचरितं भवति। अत एव ग्रन्थेषु

तत्र तत्र एकस्थानमादिरिति व्यवह्रियते । तदुत्तरोत्तराणि तु यथासम्भव-मन्त्यमित्यपि व्यवह्रियते । यत्र यदन्त्यं भवति—तदपेक्षया तत्पूर्वपूर्वाण्य-पि तत्तदादित्वेन व्यवह्रियन्ते । वेदे—लोके च संस्कृतभाषायां संख्या-निरूपणप्रस्तावे एकस्थानसंख्यैवाऽऽदौ प्रयुज्यते यथा—एकादश, द्वादश, एकविंशतिः, द्वाविंशतिः, त्रयस्त्रिंशत्, पञ्चत्रिंशत्, त्रिसप्तत्युत्तरशतं, त्रिणवतिशतमित्येवमादि । नीलकण्ठदीक्षितचरणा अपि नीलकण्ठविजये—"अष्टत्रिंशदुपस्कृतसप्तशताधिकचतुस्सहस्रेषु" इत्याद्युदाजह्रुरिति ॥ अस्मिन् शास्त्रे—"बाहू खोत्कृतिभिश्शरातिधृतिभि" रित्यादौ छन्दसां संख्यावा-चकतयोदाह्रियमाणत्वात्तत्संज्ञा वृत्तरत्नाकरोक्ताऽत्र लिख्यते ॥

"उक्ताऽत्युक्ता तथा मध्या प्रतिष्ठाऽन्या सुपूर्विका ।
गायत्र्युष्णिगनुष्टुप्च बृहती पङ्क्तिरेव च ॥
त्रिष्टुप्च जगती चैव तथातिजगती मता ।
शक्वरी साऽतिपूर्वा स्या दष्ट्यत्यष्टी तथा स्मृते ॥
धृतिश्चातिधृतिश्चैव कृतिः प्रकृतिराकृतिः ।
विकृतिस्संकृतिश्चैव तथाऽभिकृतिरुत्कृतिः ॥" इति ॥

अत्र उक्ताद्या उत्कृतिपर्यन्ताः क्रमेण एकादीनां षड्विंशतिपर्यन्तानां संज्ञा ज्ञेयाः । एवमेव— "दिवाकरगुणा" इत्याद्युदाहरणेषु भूतादीनां संख्यावाचकतादर्शनात् तत्संज्ञाश्चात्र कर्मप्रदीपिका व्याख्यानोक्ताः प्रद-र्श्यन्ते । तथा च तद्वाक्यं—"एवमेवात्र भूतसंख्यादर्शनात्तद्विज्ञानमन्तरेण तत्कार्यं न सङ्गतम् । तस्मात्तत्संज्ञासु काश्चन संज्ञाः पद्यरूपेण लिख्यन्ते—

शून्ये स्याद्गगनाऽऽख्या क्षितिचन्द्राख्या भवति चैकत्वे ।
पक्षाऽयनाश्विनेत्रश्रोत्राख्या दर्शिता द्वित्वे ॥
राम जगद्गुण पावक संज्ञास्त्रित्वे प्रयोजिताः पूर्वैः ।
वेदोपाययुगार्णव नामान्युक्तानि वै चतुष्कत्वे ॥
भूतेन्द्रिय विषयशर ब्रह्म मरुत्संज्ञकास्तु पञ्चानाम् ।
रसतर्काङ्ग नयर्तुस्कन्दास्योर्म्याख्यकास्तथा षण्णाम् ॥

स्वरबाराश्वाद्रिमुनिद्वीप छन्दोऽभिधा च सप्तत्वे ।
मङ्गलवसुमातङ्गभुजङ्गैश्वर्याभिधानमष्टानाम् ॥
नन्दाङ्कधेनुरन्ध्रमहनिधिरत्नाह्वया तु नवसंख्या ।
दिक्संज्ञा दशकत्वेऽप्येकादशके तथैव रुद्राख्या ॥
राशिदिवाकरसंज्ञा द्वादशके तत्परे तु विश्वाख्या ।
मनुवासव विद्याख्या श्चतुर्दशत्वं समागता नित्यम् ॥
पञ्चदशत्वे प्रोक्ता तिथिसंज्ञा सामिधेनी च ।
भूपाख्या षोडशकेऽप्यष्टादशके तथा पुराणाऽऽख्या ॥
नखसंख्या विंशत्वे सप्तत्रिगुणे तथा समित्संज्ञा ।
त्रिगुणाष्टके जिनाऽऽख्या तत्वाऽऽख्या साऽपि पञ्चविंशत्वे ॥
ताराऽऽख्या त्रिघनत्वे द्वात्रिंशत्वे तथैव दन्ताख्या ।
सप्तकृतावुद्दिष्टं स्थानमिति प्रसिद्धनामानि ॥ इति ॥ (१०-११)
अन्याश्च संज्ञा यथासम्भवमुदाहार्याः ।

इति संज्ञाप्रकरणम् ॥

अथ परिकर्माष्टकप्रकरणम् ॥

तत्राभिन्नपरिकर्माष्टकम् ॥

अथ सङ्कलितव्यवकलितयोः करणसूत्रं वृत्तार्धम्—

कार्यः क्रमादुत्क्रमतोऽथवाऽङ्कयोगो यथास्थानकमन्तरं वा ।११½।

இனி (1) கூட்டல் (2) கழித்தல்—
(முறையைக்காட்டுவது அரை சுலோகம்)

अङ्कयोगः - எண்களின் கூட்டலோ, **अन्तरं वा** - (அவைகளின்) கழித்தலோ, **यथास्थानकं** - அந்தந்தஸ்தானம் மாறாமல், **क्रमात्** - வரிசையாகவோ, (அதாவது கடைசிஸ்தானத்திலிருந்தோ), **अथ वा** - அல்லது, **उत्क्रमतः** - அதற்கு மாறுதலாகவோ, (அதாவது முதல்ஸ்தானத்திலிருந்தோ), **कार्यः**(0) - செய்யத்தகுந்

अथ व्यस्तविधित्रैराशिकादिसकलगणितकर्मणां परिकर्मसाध्यत्वात्, गुणनादीनां परिकर्मणां सङ्कलितव्यवकलितप्रायत्वात्तज्ज्ञानमन्तरेणासिद्धेः, प्रथमं सङ्कलितव्यवकलितसूत्रमवतारयति— अथ सङ्कलितेत्यादिना— सङ्कलितं = सङ्कलनं, भावे निष्ठा । अङ्कानां संयोजनमिति यावत् । व्यवकलितं = व्यवकलनं, पूर्ववत्—तेषां वियोजनम् । तयोः—करणसूत्रं— करणस्य = क्रियायाः, सूत्रं = सूचकं—संग्रहेण बोधकं वृत्तार्धम् । इन्द्रवज्रावृत्तपूर्वार्धमित्यर्थः । अत्र सङ्कलनादीनां पारिभाषिकी परिकर्मसंज्ञा । अथ सूत्रमुदाहरति—कार्य इति—अङ्कयोगः = अङ्कस्य, अङ्कयोः अङ्कानां वा—योजनम् । योज्याङ्केनेत्यर्थसिद्धम् । क्रमात् = अन्त्याङ्कप्रभृति वा, अथ वा—उत्क्रमतः = तद्विपरीत्येनाऽऽद्याङ्कप्रभृति वा । यथा स्थानकं— स्थानमनतिक्रम्य वर्तत इति यथा स्थानं, यथास्थानमेव = यथास्थानकं, तत्तत्स्थानानतिक्रमेण— शतस्थानस्थितोऽङ्कश्शतस्थानस्थितेनाङ्केन, दशस्थानगतो दशस्थानगतेन, एकस्थानग एकस्थानगेन यथा योजितो भवेत्तथेत्यर्थः । कार्यः = कर्तव्यः । अन्तरं वेति व्यवकलनपरः सूत्रभागः । अत्रापि, क्रमात्, अथ वा, उत्क्रमतः, यथास्थानकमित्यनुषञ्जनीयम् । कार्यमिति च लिङ्गविपरिणामेन योज्यम् । अङ्केत्येकदेशमनुवर्त्य षष्ठ्यन्ततया विपरिणम्य योज्यः । अथ वा, अङ्केति लुप्तषष्ठीकं भिन्नमेव पदमुभयत्रान्वेति । तेनायमर्थः । अङ्कस्य, अङ्कयोः, अङ्कानां वा, अन्तरं = वियोजनं = वियोज्याङ्काच्छोधनम् । क्रमादित्याद्युक्तार्थम् । कार्यम् । अत्रेदं बोध्यम् । अङ्का यत्र संयुज्यन्ते—तत्—योज्यम् । ये संयुज्यन्ते— ते योजकाः । योज्याङ्क उपरि स्थाप्यः । योजकास्त्वधोऽधः । योजकाङ्क

தது. அதாவது ஒன்றுவது ஸ்தானத்திலுள்ள எண் ஒன்றுவது ஸ்தானத்திலுள்ள எண்ணோடும், பத்துஸ்தானத்திலுள்ளது பத்து ஸ்தானத்திலுள்ளதோடும், நூறுஸ்தானத்திலுள்ளது நூறுஸ்தானத்திலுள்ளதோடும், இம்மாதிரியே மேல்ஸ்தானங்களிலும் சேரும்படி கூட்டவேண்டும். கழித்தலிலுமிவ்விதமாகவே ஸ்தானம் மாறுமல் கழிக்கவேண்டும்.

ஆர்யதர்மம் அனுபந்தம்.

தேவநாகரலிபியில் மூலத்துடனும் தமிழுரையுடனும் கூடின புஸ்தகங்கள்.

தேசாபிமானத்திற்கு மதாபிமானமும், மதாபிமானத்திற்கு தேசாபிமானமும், இவ்விரண்டிற்கும் தேசிய பாஷாபிமானமும் இன்றியமையாததென்பதைத் தாங்கள் நன்குணர்ந்தவர்களாகவே இருக்கின்றீர்கள்.

தேசாபிமான மதாபிமானங்களை உள்ளபடி ஊட்டும் பல நூற்கள் வடமொழியி லிருப்பதுபற்றி உள்ளபடி அதன்பொருளை யாவரும் எளிதில் அறிந்துகொள்ளுமாறு வெகு பாடுபட்டு எளிய தமிழ் நடையில் பதவுரை, கருத்துரை, விசேஷவுரைகளை எழுதி இதுவரை பல நூற்களை வெளியிட்டிருப்பதுடன் முறையே அதே வெளியீடுவேலையைத்தொடர்ச்சியாகவே செய்தும் வருகிறோம்.

ஆகவே வடமொழியிலுள்ள நூற்களின் கருத்தை யாவருமறியுமாறு வெளியிடாதிருந்து வந்ததாக ஒரு சிலரால் சிலரிடத்துக் கூறப்படும் பழிச்சொல்லுக்கு இனி இடமில்லை. இந்த சமயத்தில் நீங்கள் பின்வாங்கமாட்டீர்களென்றே நம்புகிறோம்.

சோதிட சாஸ்திர கிரந்தங்கள்.

பிருஹத் ஜாதகம்

தமிழ் மொழிபெயர்ப்பு

இதையே ஹோரை என்றும், வராஹ ஹோரை என்றும் சொல்லுவர். இதற்குப் பல வியாக்யானங்களுக் கிணங்கவும், நமது சொந்தமான பல அனுபவங்களுக் கிணங்கவும் சுலபமான தமிழ் நடையில் பதவுரை, கருத்துரை, விசேஷவுரை இவைகளை எழுதி தேவநாகரலிபியில் மூலத்துடன் வெளியிட் டிருக்கிறோம். யாவராலும் மிக்க கடினம் எனக் கருதப்படும் ஆயுர்த்தாயம், தசாந்தர்த்தசை, நஷ்ட ஜாதகம் முதலிய பாகங்களுக்கு யாவர்க்கும் புரியக்கூடிய நிலையில் மிக்க விரிவாக உரை எழுதப்பட் டிருக்கின்றது. உதாஹரணமாய் பலஅனுபவ ஜாதகங்களும் கட்டங்களும் ஆங்காங்கு கொடுக்கப்பட் டிருக்கின்றன. கர்க்கர், பராசரர், சத்தியா சாரியர், யவனேசுவரர் முதலியோரின் கிரந்தங்களினின்றும்,ஸாராவளியினின்றும் அந்தந்த விடத்திற்குத் தேவையான வசனங்களை எடுத்து எழுதி தமிழில் உரையுமெழுதப்பட் டிருக்கிறது. இதன் முகவுரையில் சோதிட சாஸ்திரம் நம்பத்தக்கதல்ல என்றது முதலிய வாதங்களுக்குத் தக்க சமாதானமும், வராஹமிஹிரரின் கால நிர்ணயமும் செய்யப்பட் டிருக்கிறது. ஒவ்வொரு மனிதனும் தனது எதிர்கால நிலையை யறிந்து கொள்வது அவச்யமாதலால் சோதிடத்தை யப்யசிக்க விருப்பமுள்

ளோரும், பல சாஸ்திரத்திற் பழகுகின்றவர்களும் இப் புஸ்தகத்தைப் படிப்பது மிகவுமவசியம். புஸ்தகம் டிம்மி எட்டு பக்க அளவில் சுமார் 750 பக்கங்களுள்ளது. கிலிட்டு எழுத்துடன் உயர்ந்த காலிகோ பைண்டு செய்தது. கிளேஸ். ரூ. 8 ரப். ரூ. 7.

ஜாதக சந்திரிகை தமிழ் மொழிபெயர்ப்பு.

(2) இப்புஸ்தகம் சோதிட சாஸ்திரமாகிற இரும்புப்பெட்டிக்குத் திறவுகோலாகும். இதிற் சொல்லிய முறைகள் யாவும் அநுபவத்திற்கு மிக்க ஒத்தவைகளாகும். இதனுதவியின்றி பலன் சொன்னால் அப்பலன்கள் பெரும்பாலும் அநுபவத்திற்கு ஒத்திருக்க மாட்டா. மேலும் இதில் விவாஹத்திற்குவேண்டிய 10 விதப் பொருத்தங்களைப் பார்க்கவேண்டிய முறைகள், அங்காரகதோஷ நிர்ணயம் முதலிய முக்கியமான விஷயங்களுமடங்கியிருக்கின்றன. விலை ரூ 1. 1-2-0 க்கு ஸ்டாம்பு அனுப்பியும் இதைப்பெறலாம்

(3) கோசரபல நிர்ணயம்—இதில் கோசரபலன் பார்க்கவேண்டிய முறைகள் விரிவாய் கூறப்பட்டிருக்கின்றன.

தசாபுக்திபலன்களும், கோசரபலன்களும் சிலவிடங்களில் மாறி நடப்பதற்குரிய காரணங்களும், கோசரபலன், தசாபுக்தி பலன் இவற்றை எவ்விதம் கவனித்தால் அநுபவத்தில் அது ஒத்துவரக்கூடும் என்பதும் பல திருஷ்டாந்தங்கள் வாயிலாக விரித்துக் கூறப்பட்டிருக்கின்றன. மேலும் உத்திரட்டாதி நக்ஷத்திரம் மீனலக்கினத்திற் பிறந்த ஜாதகனுக்கு கோசரபலன் பார்க்கும் முறையை அநுபவத்திற்கு ஒத்தவாறு விரித்துக் கூறப்பட்டிருப்பதைக்கொண்டு எந்த நக்ஷத்திர எந்த ஜாதகத்திற்கும் கோசரபலன் தெளிவாய் தெரிந்து கொள்ளக் கூடும் என்பதை நாம் அதிகம்சொல்ல வேண்டுவதில்லை. சோதிடசாஸ்திரத்திற் கொஞ்சமும் பரிசய மில்லாதவனும் கூட அவ்வப்பொழுது தனக்கு நேரும் பலன்களை இதனுதவியால் நிச்சயமாய் தெரிந்து கொள்ளக்கூடும் என்பதைக் கூசாமல் கூறலாம். பள்ளியிற்பயிலும் மாணவர்கள் கூட இதனுதவியால் அந்தந்த வருஷத்தில் மேல் வகுப்புக்கு மாற்றம், பரீக்ஷையில் தேர்ச்சி இவற்றை நன்கு தெரிந்து கொள்ளக்கூடும் என்றால் மற்றவர் விஷயத்தில் சொல்லவும் வேண்டுமோ? விலை அண 12. 14 அணவுக்கு ஸ்டாம்பு அனுப்பியும் பெறலாம்.

(4) நஷ்ட ஜாதகம்.—தேவநாகரலிபியில் மூலத்துடனும் தமிழில் விரிவான பதவுரை கருத்துரைகளுடனும் கூடியது. வராஹமிஹிரரால்செய்யப்பட்டநஷ்ட ஜாதகாத்யாயத்தை யனுஸரித்தது. இதனால் ஜாதகமில்லாதவனும் தனது ஜாதகத்தைக்கணித்து கொண்டுவிடலாம். வி'லை அண 4. 5 அணவுக்கு ஸ்டாம்பு அனுப்பியும் பெறலாம்.

உடுதசாபல நிர்ணயம்.

(5) இத்தலையங்கத்தின் கீழ் பராசரஸம்ஹிதை, பலதீபிகை, ஸாராவளி, ஜாதகசந்திரிகை, ஸர்வார்த்தசிந்தாமணி, தமிழ்ஜாதகாலங்காரம் முதலிய புராதன சோதிட கிரந்தங்களில் உடுதசாவிஷயமாய்ச் சொல்லிய பலன்களையும், ஷை தசையைப் பரிசீலனம் செய்யவேண்டிய முறையையும் ஒருங்கே சேர்த்து வெளியிட்டிருக்கிறோம். இதில் தேவநாகரலிபியில் அந்தந்தகிரந்தங்களிலுள்ள மூலசுலோகங்களும், பல அனுபவஜாதகங்கள் உதாஹரணங்கள் இவைகளுடன் கூட எளியதமிழ்நடையில் எழுதப்பட்ட கருத்துரையும் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், இப்புஸ்தகத்தில் ஒவ்வொரு தசையையு மெடுத்துக்கொண்டு, புக்தி, அந்தரம், ஸூக்ஷ்மம், பிராணன் வரையுள்ள காலப் பிரிவினைகளை கட்டம்போட்டு காண்பித்து ஒவ்வொன்றிலும் நடக்கும் பலன்களும் விவரமாய் கூறப்பட்டிருக்கின்றன. ஆகவே இப்புஸ்தகமொன்று கைவசமிருக்குமானால் உடுதசாபலனைப் பற்றியறிவதற்கு வேறு புஸ்தகம் தேவையாக விருக்காதென்பதுடன், மனம்போனவாறு தசா, புக்தி, அந்தர, சூக்ஷ்ம, பிராண பலன்களைச் சொல்லும் ஏனைய சோதிட வித்வான்களையணுகி அவர் மொழி கேட்பதன் மூலம் நேரும் சிரமமும் உங்களுக்கு ஒருபொழுதும் நேராதென்பதுவும் திண்ணம். மேலும், நாம்பலவருஷகாலமாய் சோதிடத்தில் பாடுபட்டு எந்த அனுபவ முறைகளைக்கண்டு கொண்டிருக்கிறோமோ அவற்றையும் ஆங்காங்கு குறிப்பிட்டுமிருக்கிறோம். சோதிடத்தில் பரிசிரமப் படுகின்றவர்களுக்கு எந்தப் புஸ்தகமொன் றிருந்தால் மற்றபுஸ்தகங்கள் தேவையாக விராதென்பதை நமது அனுபவத்தினின்றும் கண்டு இப்புஸ்தகத்தை வெளியிட்டிருப்பதால் யாவர்க்கும் இப்புஸ்தகம் நிரம்பவும் தேவையாகவிருக்கும் என்பதில் யாதும் ஐயமில்லை. ஸ்வல்பகாபிகளே அச்சிட்டிருப்பதால் முந்துவது நலம். டிம்மி 1க்கு 8 பக்க அளவில் சுமார் 480 பக்கங்களுள்ளது. • விலை கிளேஸ் ரூ. 4. ரப் ரூ. 3-8-0.

(6) நவக்கிரஹாராதனக் கிரமம். இதில் நவக்கிரஹங்களை யாராதிப்பதேன்? என்ற விஷயமாய்ப் பலவாக்ஷேப சமாதானங்களடங்கிய விரிவான உபன்னியாசமும், எந்தெந்தக் காலங்களில் ஆராதிக்க வேண்டும் என்பதும், நவக்கிரஹப் பிரதிமை, நவக்கிரஹ ஹோம குண்டம் முதலியவற்றைத் தயாரிக்கவேண்டிய முறையும், ஆராதனத்திற்கு வேண்டிய மந்திரங்கள் தமிழுரையுடனு மடங்கி இருக்கின்றன. அத்துடன் நவக்கிரஹ மந்திரம், நவக்கிரஹ ஸ்தோத்திரம், நவக்கிரஹ கவசம், நவக்கிரஹ அஷ்டோத்தரம், விஷ்ணு கவசம், ஆதித்யஹிருதயம் இவைகள் பாராயணத்திற்கு உபயோகப்படுமாறு நாகரலிபியில்தனியே பிழையின்றி அச்சிடப்பட் டிருக்கின்றன. விலை கிளேஸ். ரூ. 1-4-0 ரப் 1-0-0

வைதிக க்ரந்தங்கள்.

த்ரிவேதி ஸந்த்யாவந்தனம்.

(7) இந்த இரண்டாவது பதிப்பில் ருக், யஜுஸ், ஸாமவேதிகளின் ஸந்தியாமந்திரங்கள் யாவும், தேவநாகரம், கிரந்தம், தமிழ் ஆகிய மூன்று எழுத்துக்களிலும் அச்சடிக்கப்பட்டிருப்பதுடன் தமிழில் பதவுரை எழுதும்பொழுதும் அதே மூன்று எழுத்துக்களிலும் மந்திரபதங்கள் அச்சடிக்கப் பட்டிருக்கின்றன.

உதாஹரணமாய்—(மூலம்) आयातु वरदादेवी (ஆயாது வரதாதேவீ ஆயாது வரதாதேவீ) (பதவுரை) वरदा (வரதா வரதா)= வேண்டிய வரனைத்தருகின்ற देवी (தேவீ தேவீ)=தேவியானவள் आयातु (ஆயாது ஆயாது)=என்னை யனுக்கிரஹிக்கவேண்டி வரட்டும். என்ற மாதிரியாய் எல்லா மந்திரங்களும் விளக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இந்தப்பதிப்பானது ஸந்தியா மந்திரார்த்தங்களை அறிந்து கொள்ள ஆவலுள்ள எவர்க்கும் மிக்க மிக்க உபயோகமான தென்பதில் யாதும் ஆக்ஷேபமில்லை. மேலும், பிராணாயாமத்தைப்பற்றியும், காயத்திரீ மந்திரார்த்தத்தைப் பற்றியும், அர்க்கியம் விடுதலைப்பற்றியும், ஆஸனக்கிரமத்தைப் பற்றியும், காலையில் ஜபிக்கவேண்டிய (ப்ராத: ஸ்மரணீயம்) தைப் பற்றியும் மற்றும் பல விஷயங்களைப்பற்றியும், பலவாசங்கா ஸமாதானங்களுடன் இப்புஸ்தகத்திலெழுதியிருப்பதுபோல் வேறு எந்தப்புஸ்தகத்திலும் இதுகாறும் வெளிவந்ததில்லையென்று நாம் சொல்லுவது மிகையாகா. மேலும், இப்பதிப்பில் தனியாய் மூன்றுவேதிகளின் ஸந்தியாமந்திரங்கள்யாவையும் தேவநாகரம், கிரந்தம், தமிழ் மூன்று எழுத்திலும் அச்சிட்டிருப்பதுடன், மூன்றுவேதிகளின் ஸமிதாதானம், ஔபாஸனம், பிரும்மயக்ஞும் யக்ஞோபவீத தாரண மந்திரம், பீஷ்மதர்ப்பணம் ஆகிய இவ்விஷயங்களும் தேவநாகரம், கிரந்தம் ஆகிய இரண்டெழுத்தில் மட்டும் அச்சிட்டு சேர்க்கப் பட்டிருக்கின்றன. இப்புஸ்தகம் டபிள்கிரௌன் 16 பக்க அளவில் 25 பாரங்களும், 400 பக்கங்களும் கொண்டது.

புல்காலிகோ பைண்டு செய்த கிளேஸ் காபி ரூ. 3—0—0.

சாதா பைண்டு செய்த ரப் காபி ரூ. 2—4—0.

(8) ஸ்ரீ ருத்திரம்.—கிரந்த லிபியில் மூலமும், எளிய தமிழ் நடையில் எழுதப்பட்ட பதவுரை கருத்துரை விசேஷ உரைகளுமுள்ளன. இதன் முகவுரையில் ஸ்ரீருத்திரத்தின் மாஹாத்மியமும், பரசிவத்தின் மேன்மை, ஸௌலப்யம் முதலிய குணங்களும் தக்கப் பிரமாணத்தை முன்னிட்டு வரையப்பட்டிருக்கிறன.

கிளேஸ் காபி 1-8-0. ரப் காபி 1-0-0.

(9) புருஷ சூக்தம் முதலியன.—இதில் புருஷசூக்தம் ஸ்ரீ சூக்தம், துர்க்கா சூக்தம், ஆதிசங்கர பகவத் பாதாசாரிய ஸ்வாமிகளவர்களால் செய்யப்பட்ட கனகதாராஸ்தவம் என்ற லக்ஷ்மீ ஸ்தோத்திரம் இவை எளிய தமிழ் நடையில் எழுதப்பட்ட பதவுரை, கருத்துரை விசேஷவுரை இவைகளுடன் அடங்கி இருக்கின்றன. தேவநாகரலிபியில் மந்திரங்கள் போடப்பட்டிருக்கின்றன. ஸ்ரீசூக்த முகவுரையில் ஸ்ரீ சூக்த ஹோமவிதி ஸ்ரீ மந்திரம் முதலிய அருமையான விஷயங்களும், புருஷ சூக்த முகவுரையில் புருஷ சூக்த ஹோமவிதியும் சேர்க்கப் பட்டிருக்கிறது விலை 1-8-0

(10) மந்திரப்பிரச்னம்—இதில் கர்ப்பாதானம், பும்ஸவனம், ஸீமந்தோன்னயனம், ஜாதகர்மம், நாமகரணம், அன்னப் பிராசனம் சவுளம், உபநயனம், ஸமாவர்த்தனம், சிராத்தம், அஷ்டகை, ஸர்ப்பபலி ஈசானபலி முதலிய ஸம்ஸ்காரங்களில் உபயோகிக்கப்படும் மந்திரங்களும், ஷை கர்மங்களை நிரூபிக்கின்ற ஆபஸ்தம்ப கிருஹ்யஸூத்திரங்களும், ஷை கர்மங்களைச் செய்யவேண்டிய முறைகளும் தமிழுரையுடனடங்கி இருக்கின்றன. தேவநாகர லிபியில் மூலம் அச்சிடப்பட்டிருக்கிறது. விவாஹாதி ஸம்ஸ்காரங்களி லுபயோகப்படும் மந்திரங்களின் கருத்தைத் தெரிந்துக்கொண்டால் ஷை கர்மங்களில் மிக்கசிரத்தை யுமுண்டாகுமென்பதில் யாதும் தடையில்லை. ஒவ்வொரு ஆஸ்திகனிடத்துமிப்புஸ்தகமொன்றிருப்பது மிகவுமவசியமாகும். கிளேஸ் ரூ. 3. ரப் 2–8.

(11) தைத்திரீயாரண்யகம் முதல்பிரச்னம்.—இதுவே அருணம் என்றும் சூர்யநமஸ்கார பிரச்னம் என்றும் சொல்லப்படும். இதன் ஆரம்பம் **भद्रंकर्णेभिः श्रृणुयामदेवाः** என்பது. இதில் 130 பஞ்சாசத்துக்களடங்கியிருக்கின்றன. தேவநாகரலிபியில் மூலமும், நியாய வியாகரண பாரங்கதர் மீமாம்ஸா சிரோமணி பிரும்மஸ்ரீ பெரம்பூர் கணேச சாஸ்திரிகளால் எளிய தமிழ் நடையில் எழுதப்பட்ட பதவுரை, கருத்துரை, இவைகளுமுள்ளன. இம் மந்திரங்களைச் சொல்லி சூரிய நமஸ்காரஞ் செய்வதால் ஆரோக்ய மூண்டாகுமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. விலை கிளேஸ் 3-0-0. ரப் 2–0–0.

(12) யாஜுஷ ஸூர்ய நமஸ்கார மந்திரங்கள்.—பிரதி தினமும் செய்யவேண்டிய சூர்யநமஸ்கார மந்திரங்கள் தமிழில் பதவுரை, கருத்துரை விசேஷ வுரைகளுட னிதிலடங்கி இருக்கின்றன. தேவநாகரலிபியிலேயே மந்திரங்கள் போடப்பட் டிருக்கின்றன. தேவநாகரலிபியிலேயே நவக்கிரஹ நமஸ்கார மந்திரம், ஆதித்ய ஹிருதயம் இவைகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை அணா 4. 5 அணாவுக்கு ஸ்டாம்பு அனுப்பியும் பெறலாம்.

(13) வள்ளிபரிணய மணிப்ரவாளசதகம் விலை அணா. 4.

(தர்சன) சாஸ்திர க்ரந்தங்ள்.

(14) சாங்கியதத்துவ காரிகா — இதில் ஈசுவரகிருஷ்ணர் என்ற மஹானால் செய்யப்பட்ட காரிகைகளும், வாசஸ்பதி மிச்ரர் என்ற மஹானால் செய்யப்பட்ட "ஸாங்கியதத்துவ கௌமுதீ" என்ற அவற்றின் வியாக்கியானமும் தேவநாகரலிபியில் அச்சிடப்பட்டிருக்கின்றன. அத்துடன் ஒவ்வொரு சுலோகங்களுக்கும் எளிய தமிழ்நடையில் எழுதப்பட்ட பதவுரை கருத்துரைகளும் ஸாங்கிய தத்துவ கௌமுதீ என்ற வியாக்யானத்தின் கருத்தை உள்ளது உள்ளபடி வெளியிடும் தமிழ் மொழிபெயர்ப்புமடங்கி இருக்கின்றன. ஸாங்கிய சித்தாந்தத்தைத் தெரிந்து கொள்வதற்கு இதற்கு நிகரான நூல் உலகில் கிடையா என்பது திண்ணம். கிளேஸ் ரூ. 3. ரப் ரூ. 2.

பாதஞ்ஜலயோக ஸூத்திரம்

(15) இது பதஞ்ஜலி மஹருஷியால் செய்யப்பட்டது. இதில் 4 பாதங்களுண்டு. இப்பதிப்பில் ஒவ்வொரு ஸூத்திரமும் தேவநாகரம் தமிழ் ஆகிய இரண்டு எழுத்துக்களிலும் அச்சிடப்பட்டிருப்பதுடன் பதவுரை எழுதுமிடத்தும் ஷை இரண்டு எழுத்துக்களிலும் சூத்திரபதங்கள் அச்சிடப்பட்டிருக்கின்றன. இதற்கு (1) வியாஸபாஷ்யம், (2) வாசஸ்பதி மிச்ரர் வியாக்கியானம், (3) நாகோஜிபட்டவிருத்தி, (4) பாவாகணேசீய வியாக்கியானம், (5) ராமானந்த ஸ்வாமிகள் வியாக்கியானம், (6) ஸதாசிவேந்திர ஸரஸ்வதிகள் விருத்தி, (7) போஜவிருத்தி ஆகிய 7 வியாக்கியானங்களைத்தழுவி விரிவாய் தமிழில் பதவுரை, கருத்துரைகள் எழுதப்பட்டிருக்கின்றன. இந்தக் கிரந்தமானது, 1. ஸாங்க்யம், 2. யோகம், 3. நியாயம், 4. வைசேஷிகம், 5. பூர்வமீமாம்ஸை, 6. உத்தரமீமாம்ஸை, என்ற ஆறு தரிசனங்களுள் 2வதாகவுள்ளது. வேதாந்த சாஸ்திரங்களிலுள்ளவிஷயங்கள் இப்புஸ்தகத்தினுதவியின்றி தெளிவாய் மனத்திற்றைக்க மாட்டாவென்பது திண்ணம். மேலும்,வேதாந்தம் படித்தவர்க்கும், படிக்க ஆவலுள்ளவர்க்கும், படிக்காதவர்க்கும் இப்புஸ்தக மொழிமெயர்ப்பானது மிக்க மிக்க உபயோகமானதாகவே இருப்பதுடன் ஆஸ்திகனுக வுள்ள ஒவ்வொரு ஆரியர்கையிலு மிப்புஸ்தக மிருக்கவேண்டுவது மிக்க அவசியமானதாகவும் இருக்கிறது. ஆரிய சாஸ்திரங்களின் தத்துவம் யாவும் இப்புஸ்தகத்தைப் படித்தால்தான் நன்கு புலப்படும். இச்சமயத்தை வீணுக்கவேண்டாம். முந்துங்கள்! முந்துங்கள்!! முந்துங்கள்!!! டிம்மி 8 பக்க அளவில் சுமார் 310 பக்கங்களுள்ளது. புல் காலிகோ பைண்டு செய்த கிளேஸ்காபி 3-8-0. சாதா பைண்டு செய்த கிளேஸ்காபி 3-0-0. சாதா பைண்டு செய்த ரப் காபி 2-8-0.

(16) ஸ்ரீகோபிகாகீதம் — ராஸக்ரீடா காலத்தில் பகவானைக் காணுது அவரை நேரில் வரவழைப்பதற்காக ஸ்ரீகோபிகைகள் உள்ளம் உருகிப்பாடிய சுலோகரூபமான பாடல்கள். பதவுரை, கருத்துரைகளும் ராஸக்ரீடா ரஹஸ்யார்த்தமும் உள்ளது அ. 12.

தேவநாகரலிபியில் மூலமட்டுள்ள புஸ்தகங்கள்.

(17) ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம்—இதில் ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாம ஸ்தோத்திரம், விஷ்ணுஸஹஸ்ரநாமாவளி, துவாதசநாம பஞ்சரம், பஞ்சாயுதஸ்தோத்திரம், ஸ்ரீ தேசிகனால் ஸாதிக்கப் பட்ட—தசாவதார ஸ்தோத்திரம், பகவத்தியான ஸோபானம், ஸ்ரீ கோபாலவிம்சதி, திருவிச நல்லூர் அய்யாவாள் அவர்களால் செய்யப்பட்ட ஸ்ரீகிருஷ்ணத்வாதச மஞ்சரீ, ஸ்ரீகிருஷ்ணஷ்டோத்தர சதநாமாவளி இவைகளடங்கி யிருக்கின்றன. நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது. (நாகரலிபி) விலை அணு 5.

(18) இந்திராக்ஷீ சிவகவச ஸ்தோத்திரம்—(தேவநாகரலிபியில்) அ.2.

(19) நீதிசதகம்—தேவநாகரலிபியில் மூலம் மட்டும் அணு. 2.

எளியதமிழ் நடையிலுள்ள உபன்யாஸங்கள்.

(20) மறுபிறப்பும் லோகாந்தரமும்—பலவாக்ஷேப ஸமாதானங்களடங்கிய இனிய தமிழ் உபன்யாஸம். சரீரத்தைக் காட்டிலும், ஆத்மா ஒருவனிருக்கிறு னென்பதும், அவன் லோகாந்தரம் செல்லும் முறையும் நன்கு விளக்கப்பட்டுள்ளன. விலை அணு. 4.

(21) சிராத்தம்.—விரிவான ஓர் தமிழ் உபன்யாஸம் மட்டும். இதில் தத்காலம் சிராத்தத்தைப் பற்றி செய்யப்படும் எல்லாவிதமான ஆசங்கைகளுக்கும் லோகானுபவத்தை யொட்டித் தக்க சமாதானங்கள்கூறப் பட்டிருக்கின்றன. விலை அணு 3.

(உ) மூன்றுவேதிகளின் ஸந்தியாதி மந்திரங்கள்.

(22) இதில் சந்தியா மந்திரங்களும், ஔபாஸனம் முதலியவற்றின் மந்திரங்களும் முற்கூறியபடி அச்சடித்துத் தனியாய் விலைக்குக் கொடுக்கப்படுகிறது. இதில் 144 பக்கங்க ளடங்கியது. சாதா பைண்டு விலை அணு 12.

கூடிய சீக்கிரம் வெளிவரும் புஸ்தகங்கள்.

(23) சகுனபல நிர்ணயம்—ஸ்ரீவராஹ மிஹிராசாரியரால் செய்யப்பட்ட பிருஹத்ஸம்ஹிதையிலடங்கிய சாகுனம் என்ற அத்யாயத்தை சகுனபல நிர்ணயம் என்ற தலைப்பின் கீழ் தமிழுரையுடன் வெளியிட்டுவருகிறோம். சகுனம் இன்னது, அசகுனமூலம் நேரும் பலன் இன்னது எனப் பகுத்தறிவதற்கு இப் புஸ்தகமின்றியமையாததாகும். (அச்சிலிருக்கிறது.)

(24) தைத்திரீயோபநிஷத்—ஸ்ரீ சங்கர பாஷ்யத்திற்கிணங்க அத்வைதஸம்பிரதாயானுஸாரியான அர்த்தமும், ஸ்ரீராமானுஜ பாஷ்யத்திற்கிணங்க விசிஷ்டாத்வைத ஸம்பிரதாயானுஸாரியான அர்த்தமும், ஆங்காங்கு வித்யாரண்ய ஸ்வாமிகளால் எழுதப் பட்ட விசேஷமான பொருளும், எளிய தமிழ்நடையில் எழுதப்

பட்ட பதவுரை, கருத்துரைகளுடன் வெளியிடப்படுகின்றது. தேவநாகரலிபியில் மூலமுள்ளது. (அச்சிலிருக்கிறது.)

॥ स्वाराज्यसिद्धिः ॥

सर्वतन्त्रस्वतन्त्रैः श्रीगङ्गाधरेन्द्रसरस्वतीन्द्रैः विरचिता तैरेव विरचितया **कैवल्यकल्पद्रुमाख्यव्याख्यया** वेदान्तविभूषणशास्त्ररत्नाकरादिबिरुदाञ्चितैः चेन्नपुरीस्थ-संस्कृतकलाशालाप्रधानाद्वैतवेदान्त शास्त्राध्यापकैः ब्रह्मश्रीयुत करुङ्गुळं **कृष्ण शास्त्रिभिः** विरचितया **परिमळाख्य** विषमस्थलटिप्पण्या च समेता ॥

भोमहाशयाः!

अयं च ग्रन्थः कृत्स्नमद्वैतसिद्धान्तसर्वस्वं प्रसन्नसरळगंभीरमधुरैः मूलश्लोकैः, तद्विवरणैश्च करतलामलकवत्प्रकटीकरोतीत्ये तदनुभवसाक्षिकं वाचकमहाशयानाम्। यथायं ग्रन्थः सुस्पष्टमामूलाग्रमद्वैतसिद्धान्तं प्रकाशयति न तथान्यः प्रकरणग्रन्थ इति मुक्तकण्ठं वक्तुं पार्येत । अयं च ग्रन्थः यद्यपि काश्यां शिलालिपिभिः मुद्रित आस्ते, अथापि सुन्दराक्षरैरमुद्रणात्, अशुद्धिबहुलत्वात्, विषमस्थलटिप्पण्यभावाच्च न पठितृणां हृदयङ्गमो वर्तत इति सुन्दरैः सीसकाक्षरैः अतिधवळश्लक्ष्णायां पत्रिकायां अर्थावबोधोपयोगिचिह्नैः परिष्कृत्य इदानीमस्माभिः स्वकीयार्यमतसंवर्द्धनीमुद्राक्षरशालायां मुद्रितः। एतत्पुस्तकमेकं ग्रहीत्वा अस्मदुद्यमं सफलयेयुरत्रभवन्त इति विश्वसिमः ॥

निदर्शनार्थं च अनेन सह कश्चन भागः प्रेषितः॥ सचामूलाग्रमवलोकनीय इति संप्रार्थये ॥ ये च समुदायवाचक पुस्तकालयेषु अधिकृताः तेपि स्वस्वपुस्तकालयार्थमेतत्पुस्तकं ग्राहयेयुरितिच संप्रार्थये ॥

मूल्यम्...ग्लेस् . ४-०-०. रफ्. ३-८-०.

வீ. பீ. சார்ஜ் வேறு } கடலங்குடி நடேச சாஸ்திரிகள்,
72 பெரிய தெருவு, திருவல்லிக்கேணி, சென்னை.